# மிலேனியம் சலெஞ்ச் கோப்ரேஷன் நன்கொடை (Millennium Challenge Corporation)

மிலேனியம் சலெஞ்ச் கோப்ரேஷன் இலங்கை ஒப்பந்தமானது இலங்கையினால் இதுவரை பெறப்பட்ட ஆகக்கூடிய தொகையிலான நன்கொடையாகும். இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் கட்டுப்பாடாக உள்ள இரண்டு விடயங்களான பலவீனமான போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் காணி நிர்வாக செயற்பாடு என்பவற்றை இலங்கை அரசாங்கமும், மிலேனியம் சலெஞ் கோப்ரேஷனும் இணைந்து அடையாளம் கண்டுள்ளன.

**மொத்த நன்கொடை தொகை : 480 மில்லியன் டொலர்கள் ஐந்து வருடங்களுக்கு**
**நன்கொடை அனுமதிக்கப்பட்டது : 25, ஏப்ரல் 2019**
**திட்டம் : போக்குவரத்து, காணி**



## போக்குவரத்துத் திட்டம் 350 மில்லியன் டொலர்கள்

### மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து முகாமைத்துவ திட்டம் 160 மில்லியன் டொலர்கள்

- 205 கிலேமீற்றர் நகர வீதி வலயமைப்பின் மேம்படுத்தப்பட்ட வினைத்திறனை அதிகரித்தல்
- வாகனங்களை கண்டறிவதற்கு நவீன தொழில்நுட்பம், போக்குவரத்துத் தொடர்பில் நிகழ்நேர தகவல் சேகரிப்பு
- ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்து சமிக்ஞை பொறிமுறை
- வலையமைப்புக்களில் பஸ் முன்னுரிமை முறை
- கொழும்பு மாநகரில் 132 நகரங்களில் சிவில் செயற்பாடுகளை மேம்படுத்தல்
- நடைபாதை கடவைகள் மற்றும் நடைபாதைகளை விஸ்தரித்தல்




### பஸ் சேவை நவீனமயப்படுத்தல்
50 மில்லியன் டொலர்கள்

- தன்னியக்க கட்டண சேகரிப்பு முறை (ஸ்மார்ட் அட்டை)
- வழங்கப்பட்ட வழித்தடத்தில் ஒரு பஸ் சேவை செயற்பாடு
- பஸ்களை கண்காணிக்க GPS – நிகழ்ச்சிநிரல் வினைத்திறன் கண்காணிப்பு
- பெண்கள், வயோதிபர்கள், விசேட தேவையுடையவர்கள் சேவையைப் பெறுவதற்கான வசதிகளை மேம்படுத்தல்
- இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் செயற்படுத்துனர்கள் அதிநவீன போக்குவரத்துக்கான புதிய பஸ்களை கொள்வனவு செய்ய உதவி

## மிலேனியம் சலெஞ்ச் கோப்ரேஷன் என்றால் என்ன?

நல்லாட்சி, பொருளாதார சுகாதாரம், தமது பிரஜைகளில் முதலீடுசெய்யவதில் அர்ப்பணிப்புடன் உள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுடன் மிலேனியம் சலெஞ்ச் கோப்ரேஷன் பங்கான்மையை ஏற்படுத்தும்.

நன்கொடைக்கான நிதியளித்தல் போட்டி தெரிவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் - மிலேனியம் சலெஞ்ச் கோப்ரேஷனின் சபை குறிப்பிட்ட நாட்டின் செயற்பாடுகளை 20 சுதந்திரமான மற்றும் வெளிப்படையான கொள்கை குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதுடன், கொள்கை செயற்பாட்டின் அடிப்படையில் நாடுகளை தெரிவுசெய்வார்கள்.

நிலைபேறான பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கு தெரிவுசெய்யப்பட்ட நாடுகள் வழங்கியுள்ள முன்னுரிமையை அடையாளம் காணுமாறு மிலேனியம் சலெஞ்ச் கோப்ரேஷன் கோரும்.

ஒரு நாட்டுக்கு மிலேனியம் சலெஞ்ச் கோப்ரேஷன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் உதவி வழங்கப்பட்டால் அதனை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்கும் முகாமைத்துவம் செய்யவும், கண்காணிப்புக்களை மேற்கொள்ளவும் பொறுப்புக் கூறும் உள்ளூர் நிறுவனமொன்று அமைக்கப்பட வேண்டும்.

### கிராமிய போக்குவரத்து செயற்பாடு
140 மில்லியன டொலர்கள

- ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் மாகாணங்களுக்கிடையிலான 131 கிலோ மீற்றர் நீளமான வீதி கட்டமைப்பை தரமுயர்த்தல்
- பொருளாதார ரீதியில் பின்தங்கியிருக்கும் மத்திய பிராந்தியத்தை மேல் மாகாணத்தின் சந்தை மற்றும் துறைமுகங்களுடன் இணைத்தல்
- வீதி பராமரிப்பின் திறனைப் பலப்படுத்தல்
- வீதி பராமரிப்பு நிதியத்துக்கு புதிய பொறிமுறையொன்றை உருவாக்குதல்

## காணித் திட்டம் 67 மில்லியன் டொலர்கள் (இலங்கையின் 8 மாவட்டங்கள்)

| அரச காணிகளை அளவிட்டு அவற்றை வரைபடத்தில் உள்ளடக்கி, அரசாங்கத்தின் ஈ-அரச காணிகள் தகவல் முகாமைத்துவ முறைமையில் தகவல்களை பதிவுசெய்தல் | அரச மற்றும் தனியார் காணிகளை துல்லியமாக அளவிடும் அரசாங்கத்தின் திறனை பலப்படுத்தல் | காணி உறுதிகள் மற்றும் ஏனைய காணிப் பதிவுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்குதல் |
|---|---|---|
| **23,400,000 டொலர்கள்** | **6,500,000 டொலர்கள** | **11,400,000 டொலர்கள்** |

காணி நிர்வாக கொள்கைத்திட்டத்தை முன்னேற்றுவதற்கான ஆய்வுகளுக்கு உதவுதல் → **6,700, 000 டொலர்கள்**

ஆரசாங்கத்தின் பிம் சவிய திட்டத்தின் ஊடாக காணி உறுதி முறையிலிருந்து தலைப்பு பதிவு முறைக்கு சொத்துக்களை மாற்றுவதன் மூலம் சகல காணி உரிமையாளர்களுக்குமான பதவிநிலை பாதுகாப்பை முன்னேற்றுதல் → **19,300,000 டொலர்கள்**

